அண்ணாமலையின் பாத யாத்திரை - 9 ஆண்டு கால

# பா.ஜ.க. ஆட்சியில் பெற்ற பாவத்திற்கான பிராயச்சித்தம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, ஆக.1-

அண்ணாமலையின் பாத யாத்திரை 9 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் பெற்ற பாவத்திற்கான பிராயசித்தம் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 100 நிகழ்ச்சிகள் நடத்த முடிவு செய்யப்பட்டு அதில் 22-வது நிகழ்ச்சியாக உயிரை காக்கும் உயிரை பேணுவோம். உடன் பிறப்பாய் பெண்மையை போற்றுவோம் என்னும் தலைப்பில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி தலைமையில் 130 கர்ப்பிணி பெண்களுக்கு பேறுகால உதவித் தொகையாக ரூ.10 ஆயிரமும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு புத்தாடை, சத்துமாவு, பிறக்கின்ற குழந்தைக்குத் தேவையான படுக்கை பொருட்களும் வழங்கப்பட்டன.

தி.மு.க.வின் சுற்றுச்சூழல் அணியின் தலைவர் மருத்துவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியாராஜன் ஆகியோர் வழங்கினர்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அண்ணாமலையின் பாத யாத்திரை கடந்த 9 ஆண்டு ஒன்றிய ஆட்சி காலத்தில் பெற்ற பாவத்திற்காக, அதற்கு பிராயசித்தம் பெரும் வகையில் அவரது யாத்திரை இருக்கிறது. தி.மு.க. ஒரு மிகப்பெரிய இயக்கம்.

இந்த இரண்டு ஆண்டுகளில் மக்களுக்கு அளப்பரிய பல திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். முதல்வர் மக்கள் மனதில் நீக்கமற சக்தியாகவும் இருந்து வருகிறார். அதனால் தான் இப்படி ஒரு புலம்பலோடு பாத யாத்திரையை அண்ணாமலை போன்றோர் மேற்கொண்டு வருகிறார்கள். எத்தனை பாத யாத்திரை நடத்தினாலும் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும்.

தி.மு.க. ஒரு எக்கு கோட்டை. ஒன்று இரண்டு சதவீதம் வைத்திருக்க கட்சியுடன் தி.மு.க.வை ஒப்பிட வேண்டாம். தி.மு.க. ஒரு மாபெரும் பேரியக்கம். தங்கத்துடன் தகரத்தை ஒப்பிட வேண்டாம்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு கூறினார்.

கார்பன் வெளியேற்றமில்லாத அம்மோனியா தயாரிப்பையும்,

# ஹைட்ரஜன் வாயுவையும் தயாரிக்க ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.1-

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், 27ஜூலை 2023 அன்று மக்களவையில், கார்பன் வெளியேற்றமில்லாத அம்மோனியா தயாரிப்பையும், ஹைட்ரஜன் வாயுவின் தயாரிப்பையும் உறுதிப்படுத் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்று ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் ஆர்.கே.சிங் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர், ஆர்.கே. சிங் அளித்த பதில் பின்வருமாறு :

கடந்த ஜனவரி 2023 முதலாக தேசிய பச்சை ஹைட்ரஜன் திட்டம் துவக்கப்பட்டது என்றும், அதன் சார்புப் பொருட்கள், பயன்பாடுகள், ஏற்றுமதி ஆகியன மூலம், கார்பன் வெளியேற்றமில்லாத, அம்மோனியா தயாரிப்பும், ஹைட்ரஜன் தயாரிப்பும் திட்டமிடபட்டுள்ளது என்றும், வருகின்ற 2030 ஆண்டிற்குள் 50 இலட்சம் மெட்ரிக் டன்கள் கார்பன் வெளியேற்றமில்லாத ஹைட்ரஜன் தயாரிக்கப்படும் என்றும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், பல்வேறு சலுகைகளை ஒன்றிய அரசு அளித்து வருவதாகவும், தயாரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கவும், அதற்கான கொள்கை முடிவுகள், ஆராய்ச்சி, திறன் மேம்பாடு, விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம், கார்பன் வெளியேற்றமில்லாத ஹைட்ரஜன் தயாரிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

9 ஆண்டு கால ஆட்சியில் எதையும் செய்யாமல்

# தங்கள் தோல்வியை மறைப்பதற்கு மக்களை பா.ஜ.க. திசை திருப்புகிறது!

## தயாநிதி மாறன் எம்.பி. குற்றச்சாட்டு!



சென்னை, ஆக.1-

கடந்த 9 ஆண்டு கால ஆட்சியில் எதையும் செய்யாமல், தங்கள் தோல்வியை மறைப்பதற்கு மக்களை பா.ஜ.க. திசை திருப்புகிறது, என்று தயாநிதி மாறன் எம்.பி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை மாநகராட்சி, 5வது மண்டலம், துறைமுகம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 3.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளுக்கான தொடக்கவிழா நேற்று நடைபெற்றது. இதில், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி, மேயர் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

முதல் நிகழ்ச்சியாக சத்தியவாணி முத்து நகரில் 2.77 கோடி மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியை அமைச்சர் சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி ஆகியோர் தொடங்கி வைத்தனர். அதைத் தொடர்ந்து அங்கப்ப நாயக்கன் தெருவில் பள்ளி கட்டிடம் புதிப்பிக்கும் பணி, வெங்கட்டா தெருவில் அங்கன்வாடி மையத்தில் மேல் தளம் அமைக்கும் பணி, அம்மன் கோயில் தெருவில் பள்ளி கட்டிடம் புதுப்பிக்கும் பணியை தொடங்கி வைத்தனர்.

பின்னர், யானைகவுனி ரயில்வே மேம்பாலப் பணியை ஆய்வு செய்து, பணிகள் குறித்து ரயில்வே, மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணியை ஆய்வு செய்து பணிகள் குறித்து கேட்டறிந்தனர். பின்னர் மாநகராட்சி 5வது மண்டல அலுவலகத்தில் நடைபெறும் பணிகள் குறித்து ஆலோசனை செய்தனர்.

இதனையடுத்து தயாநிதி மாறன் எம்.பி நிருபர்களிடம் கூறியதாவது:

மனிதாபிமானம் இல்லாத கட்சி என்றால் அது பா.ஜ.க.தான். மோடி, அமித்ஷா இருவரும் மனிதாபிமானம் இல்லாதவர்கள்.

3 மாதம் முடிந்த பின்பும் மணிப்பூரில் நடக்கின்ற கலவரத்திற்கு பா.ஜ.க. முதலமைச்சர் ஒரு கருத்தும் கூறவில்லை. இந்தியாவில் பெண்களை கடவுளாக நினைக்கும் நேரத்தில், அங்கு இனக் கலவரத்தில் 2 பெண்களை அசிங்கப்படுத்தி அவர்களை நிர்வாணமாக்கி யதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. பெண்களை நிர்வாணப்படுத்திய வீடியோ வைரலாகியதால் நாடாளுமன்றத்தைத் தொடங்குவதற்கு அச்சப்படுகிறார்கள். இந்தியாவில் கடந்த 9 ஆண்டில் பா.ஜ.க. எதுவும் சாதிக்கவில்லை. பெட்ரோல், தக்காளி விலை அதிகரித்துள்ளது. காஸ் விலை 1,600 ஆக அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வுக்கு காரணமான பா.ஜ.க. அரசு, தங்கள் தோல்வியை மறைப்பதற்கு மக்களை திசை திருப்புகிறார்கள்.

இன்று, எதிர்க்கட்சிகள் இணைந்து பெரிய கூட்டணி உருவாகி இருக்கிறது. அடுத்த பிரதமரை தீர்மானிக்கும் தலைவராக முதல்வர் மு.க. ஸ்டாலின் உருவாகி இருக்கிறார்.

அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் பா.ஜ.க. அரசு உள்ளது. 9 ஆண்டு காலத்தில் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்திருக்கிறது?. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டுகிறோம் என்று சொன்னார்கள், இதுவரை கட்டப்படவில்லை. இதுவரை தமிழ்நாட்டிற்கு செய்ததையும், இனி செய்யப் போவதையும் பட்டியலிடுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

'தூய்மை இந்தியா' திட்டத்தின் கீழ் - குப்பைக் கிடங்குகளை சுத்தம் செய்ய

# மாநிலங்கள் வாரியாக எரியூட்டிகளை அரசு நிறுவியுள்ளதா?

## மக்களவையில் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக.1-

ஸ்வச் பாரத் மிஷன் எனும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கடந்த ஒன்பது ஆண்டுகளில் குப்பைக் கிடங்குகளை சுத்தம் செய்யவும், திடக் கழிவுகளை செல்வமாக மாற்றவும் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது குறித்தும், கடந்த ஒன்பது ஆண்டுகளில், மாநிலங்கள் வாரியாக, மெட்ரோ நகரங்களில் இருந்து குப்பை கிடங்குகள் மற்றும் நகராட்சி திடக்கழிவுகளை சுத்தம் செய்வதற்காக செய்யப்பட்ட மொத்த செலவு குறித்தும் ஒன்றிய அரசு ஏதேனும் எரியூட்டிகளை நிறுவியுள்ளதா? என்று நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து அவர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு :

ஸ்வச் பாரத் மிஷன் எனும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கடந்த ஒன்பது ஆண்டுகளில் குப்பை கிடங்குகளை சுத்தம் செய்யவும், திடக் கழிவுகளை செல்வமாக மாற்றவும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது உண்மையா? அதன் விவரங்கள் யாவை?

கடந்த ஒன்பது ஆண்டுகளில், மாநில வாரியாக, மெட்ரோ நகரங்களில் இருந்து குப்பை கிடங்குகள் மற்றும் நகராட்சி திடக்கழிவுகளை சுத்தம் செய்வதற்காக செய்யப்பட்ட மொத்த செலவு; சுத்தம் செய்வதற்காக ஒன்றிய அரசு ஏதேனும் எரியூட்டிகளை நிறுவியுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்; மேலும் கடந்த ஒன்பது ஆண்டுகளில், மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக, மெட்ரோ நகரங்களில் இருந்து குப்பை கிடங்குகள் மற்றும் நகராட்சி திடக்கழிவுகளை சுத்தம் செய்வதற்கான மொத்த செலவு எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் கௌஷல் கிஷோர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத (ODF) நோக்கத்துடன் ஸ்வச் பாரத் மிஷன் நகர்ப்புற தூய்மைப் படுத்தும் திட்டத்தை (SBMU) ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியது. நாட்டின் நகர்ப்புறங்கள். முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்ல, ஸ்வச் பாரத் மிஷன் அர்பன் (SBMU) 2.0 வாயிலாக ஐந்தாண்டு காலத்திற்கு 100% எங்கெங்கு குப்பை கொட்டப்படுகிறது அங்கேயே 100% குப்பைகளை மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என பிரித்து, அனைத்து நகரங்களிலும் குப்பை இல்லா நிலையை அடையும் நோக்குடன் அக்டோபர் 1, 2021 அன்று தொடங்கப்பட்டது. குப்பைகள் கொட்டப்பட்ட நிலப்பரப்புகளில் விஞ்ஞான ரீதியில் பாதுகாப்பாக அகற்றுவது உட்பட அனைத்து பகுதி கழிவுகளையும் வீடு வீடாக சேகரித்தல் மற்றும் அறிவியல் மேலாண்மை வாயிலாக அனைத்து மரபுவழி குப்பைகளை சரிசெய்து அவற்றை பசுமை மண்டலங்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குப்பைகள் கொட்டப்பட்ட நிலத்தில் இருந்து மறுக்கப்பட்ட பெறப்பட்ட எரிபொருள் (RDF) சிமெண்ட் ஆலைகள் அல்லது வேஸ்ட்டுஎனர்ஜி (WtE) ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. குப்பை கிடங்குகளை சுத்தப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் எரியூட்டி வைப்பது நடைமுறையில் இல்லை.

SBMU இன் கீழ் மாநிலங்கள்/யூனியன்பிரதேசங்களுக்கு வெளியிடப்படும் நிதிகள் நகரங்கள்/ULBகளுக்கு அல்ல. திடக்கழிவு மேலாண்மைக்காக மாநிலம்/அரசு வாரியாக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள், குப்பை கிடங்குகளை சுத்தம் செய்தல் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மெட்ரோ நகரங்களுக்கு தனித்தனி தகவல் பராமரிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 201421 வரையிலான காலக்கட்டத்தில் திடக்கழிவு மேலாண்மைக்காக 807.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர்புற திடக்கழிவு மேலாண்மை திட்டத்துக்காக 202126 காலக்கட்டதில் ஒரு 689.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு

# கூடுதலாக 3.50 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தகவல்!

கரூர், ஆக.1-

தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு கூடுதலாக 3.50 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதாக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கரூரில் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் வல்லகுளம், திருமலை ரெட்டிபட்டி, வேப்பங்குடி, கிருஷ்ணராயபுரம் வட்டம் மஞ்சநாயக்கன்பட்டி ஆகிய 4 இடங்களில் ஆவின் நிறுவனத்தின் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ரூ.106.51 லட்சம் மதிப்பு குளிர்விப்பு நிலையங்களை பால்வளத் துறை அமைச்சர் மனோதங்கராஜ் திறந்து வைத்தார். கரூர் வட்டம் தோரணகல்பட்டி ஆவின் குளிரூட்டும் மையத்தில் 50000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பால் குளிர்விப்பு மையம் அமைக்கப்பட்டு வரும் பணியை பார்வையிட்டார்.

கரூர் மாவட்ட கலெக்டர் பிரபு சங்கர், எம்.எ.ல்ஏ.க்கள் மாணிக்கம் (குளித்தலை), சிவகாமசுந்தரி, (கிருஷ்ணராயரம்), இளங்கோ (அரவக்குறிச்சி), கரூர் மாநகராட்சி மேயர் கவிதா முன்னிலை வகித்தனர்.

பின்னர்அமைச்சர்மனோ தங்கராஜ் செய்தியாளர்களிடம் கூறியது:-

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின் பேரில், கிராமம் கிராமமாக சென்று பால் வளத்தை பெருக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு கூடுதலாக 3.50லட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகப்படுத்தப் பட்டுள்ளது.

உதாரணமாக ஒரு விவசாயி பால் தரும்பட்சத்தில் அதில் எவ்வளவு கொழுப்பு சத்து மற்றும் புரத சத்து உள்ளது என்பதை கணக்கிட்டு விலை கொடுக்க வேண்டும் என நீண்டகாலமாக கோரிக்கை வைத்துக் கொண்டு இருந்தனர். இப்பொழுது அதை நிறைவேற்ற தரத்துடன் கூடிய பெல்ஜியம் நாட்டில் இருத்து பால் பரிசோதனை செய்யும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் செயல்பட்டு வருகிறது.

இதுவரை ஒரு விட்டர் பாலிற்கு ஒரே விலை என்பது மாற்றப்பட்டு தரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கான ரசீதும் வழங்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாதக்கணக்கில் நிலுவைத் தொகை வைத்திருந்த நிலையை மாற்றி பத்து நாட்களுக்கு ஒரு முறை பட்டுவாடா செய்ய வேண்டும் என முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

சென்ற மாதம் மட்டும் 5000க்கும் மேற்பட்ட கால் நடை வாங்குவதற்கான கடன் வசதியை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறோம். 2 லட்சம் கறவை மாடுகள் புதியதாக வாங்குவதற்கு கடன் வசதி, 10 மற்றும் 15 மாடுகளுக்கு மேல் வைத்து வளர்க்கக் கூடியவர்கள் சிறிய பால் பண்ணைகள் வைப்பதற்கும், படித்த இளைஞர்களை ஈடுபடுத்தி அவர்களை ஊக்கப்படுத்தும் முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

அதே நேரத்தில் தனியார் நிறுவனங்களை உத்திரவாதமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு சீசனில் விலை, இன்னொரு சீசனில் விலையைத் தர மாட்டார்கள். எங்கெல்லாம் ஆவின் நன்றாக உள்ளதோ அங்கெல்லாம் விலை அதிகம் கொடுக்கிறார்கள். எங்கெல்லாம் ஆவின் இல்லையோ அங்கெல்லாம் குறைந்த விலையைக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு அரசு நிறுவனம் அப்படி செய்ய முடியாது. இதுக்கு என்று நிரந்தரமான நிலை உள்ளது என்றார் அமைச்சர். மாநகராட்சி துணை மேயர் சரவணன், ஆவின் பொது மேலாளர். நாகராஜன், இணை பதிவாளர் இரணியன், மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் தேன்மொழி தியாகராஜன், பால் உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அறியப்படாத சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத்துறை

# வர்த்தக ரீதியாக வளர்ச்சி பெற ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக.1-

சுற்றுலாத்துறையை வர்த்தக ரீதியில் வளர்ச்சி பெற செய்யும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களால் அறியப்படாத சுற்றுலா தலங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று சி.என். அண்ணாதுரை நாடாளுமன்ற மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதுபற்றிய விபரம் வருமாறு :-

(அ) கடந்த மூன்று ஆண்டு களாக, இந்தியாவுக்கு வருகை தரும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதை எதிர்கொண்ட ஒன்றிய அரசு தரப்பில் சந்தித்த சவால்கள் யாவை,

(ஆ) அறியப்படாத சுற்றுலாத் தலங்களை வளர்ச்சி பெறச்செய்யும் சாத்தியக்கூறுகளை ஒன்றிய அரசு அடையாளம் கண்டுள்ளதா, அத்தகைய அறியப்படாத சுற்று லாத் தலங்களை மேம்படுத்த எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன,

(இ) அவ்வாறு அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக குறிப்பாக தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஒடிசா, அந்தமான் நிக்கோபார் தீவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அப்படிப்பட்ட சுற்றுலா தலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய விவரங்களை அளிக்கவும்,

(ஈ) பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றில் உள்ள பொது மக்களால் அறியப்படாத சுற்றுலா தலங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்காக ஒன்றிய அரசு அந்தந்த மாநில, யூனியன் பிரதேச அரசுகளின் முன்மொழிவுகளைப் பெற்றுள்ளதா, அதற்காக ஒன்றிய அரசு தரப்பில் அளிக்கப்பட்ட பதில்கள் குறித்த விபரங்களையும் அளிக்கவும்,

(உ) ஏராளமான வாய்ப்புகள் இருந்தும் நமது நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த முடியாமல் போனதற்கான காரணங்கள் என்ன என்று தெரிவிக்கவும்,

(ஊ) சுற்றுலாத்துறையின் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை மதிப்பை அதிகரிக்கும் வகையில் அதன் உள்கட்டமைப்புகள், சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு, அதற்கான விளம்பரங்கள் செய்வது ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க ஒன்றிய அரசு ஏதாவது உத்தேசம் செய்துள்ளதா எனக் குறிப்பிடவும்.

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி அளித்த பதில் வருமாறு :-

(அ) முதல் (ஊ) வரை: கோவிட் 19 தொற்று நோயால் சுற்றுலாத் துறை மோசமாக பாதிக்கப்பட்டது.அதனால், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உலக நாடுகளால் விதிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் பயணக் கட்டுப்பாடு காரணமாக சர்வதேச அளவில் சுற்றுலாவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டு முன்னெப்போதும் இல்லாத இடையூறுகள் ஏற்பட்டன. அந்த வகையில், 2020ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் சுற்றுலா என்பது 74.9 சதவிகிதம் குறைந்து விட்டது.

உலகளாவிய பொருளாதார மந்தநிலை காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க வெவ்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாக உள்ளது. அவ்வகையில் சுற்றுலா தளங்களை அடையாளம் காணுதல், மேம்படுத்துதல், ஊக்குவித்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்களின் பொறுப்பாகும்.

இருப்பினும், ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகம் மாநில அரசுகள் / யூனியன் பிரதேச நிர்வாகங்களுக்கு சுதேச தர்ஷன், புனித யாத்திரைகளுக்கு புத்துயிரளித்தல், ஆன்மீக பாரம்பரிய மேம்பாட்டு இயக்கம் (பிரஷாத்) ஆகியவற்றின் கீழும், நாட்டில் சுற்றுலா தொடர்பான உள்கட்டமைப்பை மேம்படுத்தும் மத்திய முகமைகளின் திட்டங்களுக்கு உதவி மற்றும் வளர்ச்சி நடவடிக்கை (டிபிபிஹெச்), கண்காட்சிகள், திருவிழாக்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவும் நிதி உதவிகளை அளிக்கிறது. அவ்வகையில், 2023-24 ஆம் நிதியாண்டில் சுற்றுலாத்துறை யின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக ஒன்றிய அரசு ரூ.2400 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் பதில் அளித்தார்.



கலைஞர் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்டம் 67வது வட்டக்கழக செயலாளர் ராஜேஸ் என்ற பாக்கியராஜ் ஏற்பாட்டில் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் பங்கேற்று தேர்வு பெற்றவர்களுக்கு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., பணி நியமன ஆணைகளை வழங்கிய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, தனசெல்வம், ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ஆர்.கனேசன், வீரகணேசன், சுதன், எஸ்.எஸ்.மாறன், ஆறுமுகம், கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மு. சின்னசாமி

### ஆகஸ்ட் 1 (1979)



தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.



இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.